International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 03 July to September 2022 www.irjtsjournal.org

# சிந்துவெளி கட்டடக்கலையும் இந்து கட்டடக்கலை மரபுகளில் அவற்றின் செல்வாக்கும்

**திருமதி. பிரசாந்தி இளங்கோ,**

விரிவுரையாளர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

ஒவ்வோரு சமூகங்களிலும் வாழும் மக்கள் தமது வாழ்க்கை அனுபவங்கள் மூலம் அடைந்த அறிதல்களை தொகுத்து அடுத்த தலைமுறைக்கு அளிக்கும் விதத்தில் அவற்றைத் தகவல்களாகத் தொகுத்துக் கொடுப்பது தொன்மத்தின்பாலடங்கும் " ஒரு சமூகத்தின் மொத்த சிந்தனை ஆற்றலின் வெளிப்பாடே தொன்மங்கள் " என்கிறார் மார்சிம் கார்கி. ஆய்வுகள் மூலம் இந்து நாகரிகத்தின் தொன்மை பற்றி அறியத்தரும் முதலாவது காலப்பகுதியாக விளங்குவது கி.மு . கி.மு 7000 – கி.மு 2000 வரையான சிந்துவெளிக்காலம். ஒரு நாட்டின் நாகரீகத்தின் வளர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டும் கட்புலக் கருவிகளாக கட்டடக்கலையையே அறிஞர்கள் விபரித்துள்ளனர்.

"படிப்பினையாக முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையைச் சொல்லும் எல்லா விடயங்களும் தொன்மங்கள்தான்"; எனும் இந்திய இதழியலாளரும் எழுத்தாளருமான நிவேதிகா லூயிஸ் கூற்றிற்கு இணங்க சிந்துவெளி மக்கள் தாம் அறிந்துகொண்ட அறிவியல் சார்ந்த படிப்பினைகளையும் நிறைவாக வாழ்ந்த வாழ்க்கை முறைகளையும் சமய நம்பிக்கைகளையும் அவர்தம் கட்டடக்கலை மரபுகளினூடாக விட்டுச் சென்றுள்ளனர்.

தொன்மைக் காலத்திலேயே மிகக் கவனமுடன் திட்டமிடப்பட்டு நுணுக்கமும் நேர்த்தியும் வாய்ந்ததாக உருவாக்கப்பட்ட நகர அமைப்புகளும் , தெளிந்த விண்ணியல் ஞானத்துடன் அடிப்படைத் திசையமைப்புகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட நகரத் திட்டமிடல்களும், நோய் தீர்க்கும் நீரியல் சார்ந்த வைத்திய முறைகளைத் தன்னகத்தே கொண்டமைக்கப்பட்ட நீராடும் பொய்கைகளும் , பிரத்தியேகம் பேண அமைக்கப்பட்ட உடைமாற்றும் அறைகளும் , வைத்திய முறைகொண்டு அமைக்கப்பட்ட வெப்பக்குளியல் மேடைகளும், தானியக் கோணிகள் பழுதடையாமல் பாதுகாப்பு நுட்பங்களுடன் அமைக்கப்பட்ட களஞ்சியசாலைளும் , வெண்கலச் சூளைகளும் தத்தம் கட்டட அமைப்புக;டாக அக்கால மக்களின் அறிவியல் , சமய சாஸ்திர தொன்மங்கள் பலவற்றை வெளிப்படுத்தி நிற்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இக்கட்டடங்களுள் இந்துக்கோயில்கள் இருந்தமை பற்றித் திட்டவட்டமான , கட்புலரீதியான ஆதாரங்கள் எதுவும் கிடைக்காத போதும் பல ஆராய்ச்சியாளர்களும் அறிஞர்களும் பகிரும் கருத்துக்களும் ஆய்வின் போது கிடைத்த சிற்ப , ஓவிய வடிவங்களுமஇ; சிந்துவெளியிலே இந்துமதமும் கோயில்களும் இருந்தமையையும் சமகால தென்னிந்திய கோயில் கட்டடக்கலை வளர்ச்சிக்கு அவை அடிப்படைகளாக அமைந்திருப்பதையும் அறிய முடிகின்றது

**திறவுச் சொற்கள்**

தொன்மங்கள், பொய்கைகள், தானியக் கோணிகள், நகரத்திட்டமிடல், களஞ்சியங்கள்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது ஒப்பீட்டு முறை , வரலாற்றுமுறை, விபரணமுறை, கண்டறி முறை என்பவற்றை பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றது. சிந்துவெளியின் வரலாற்றை அறிவதும் அவை கூறும் கட்டடக்கலை சார்ந்த செய்திகளை விபரிப்பதும் அவை பிரதிபலிக்கும் கட்டட அடிப்படைகளை கண்டறிந்து இந் ;துமதம்சார் கட்டட கூறுகளுடன் ஒப்பீடு செய்வதாகவுமே இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வு அறிமுகம்**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிந்துவெளி முழுவதும் பரவியிருந்த ஒரு பெரும் நாகரீகத்தின் எச்சங்களாக புதைபொருளாய்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற முத்திரைகளும், இலட்சினைகளுமஇ; கட்டட எச்சங்களுமஇ; சிற்பச் சிதைவுகளும் சிந்துவெளி பண்பாட்டில் நிலவிய சமயம் இந்துசமயமாக இருந்திருக்கலாம் என்பதற்கான பெருமளவு ஆதாரங்களை தருவதாக அராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த அடிப்படையில் நின்று கொண்டு சிந்துவெளி கட்டட எச்சங்களுக்குள் இந்துசமய ஆதாரங்களை இனம் காண்பதும் அவை பிற்கால இ ;ந்துமத கட்டடங்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் என்பதற்கான ஆதாரங்களை தேடுவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

சிந்துவெளி கட்டடங்கள் பற்றி ஆராயும் போது திசையமைப்புக்களை அறிந்து விண்ணியல் ஞானத்துடன் திசைகளை தெரிவுசெய்து கட்டடங்களை அமைத்திருந்த திறனஇ; பிற்காலத்தில் வாஸ்த்து , மனையடி சாஸ்திரங்கள் உருவாக்கப்பட ஆதாரமாகியிருக்கலாம். மாடங்களாகப் பயன்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்களால் கண்டறியப்பட்ட கட்டடப்பகுதிகள் பகுதிகள் பிற்காலத்தில் வீடுகளில் சுவாமியறைகளில் மாடங்கள் அமைக்கப்பட்டு உருவச்சிலைகளும் சுவாமி படங்களும் வைத்து வழிபட அடிப்படையாய் அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. நோய்தீர்க்கும்

நுட்பங்களுடன் அடைக்கப்பட்டிருந்த நீராடும் பொய்கைகள் , பிற்காலத்தில் இந்துக் கோயில்களுடன் அமைக்கப்பட்ட தீர்த்தக் கேணிகளுடனும் அவற்றின் படியமைப்புகளுடனும் நீராடும் வசதிகளும் அவற்றில் நீராடி நோய் நீங்கிய அதிசயங்களும் சிந்துவெளியின் நீராடும் பொய்கைகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடிய சான்றுகளைத் தருகின்றன.

இவ்வாறு சிந்துவெளியின் கட்டடக்கூறுகளிடையே இந்துமதத்திற்குரிய அம்சங்ளை இனங்காண்பதனூடாக அவற்றை அடிப்படையாக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்கக் கூடிய இந்துமதம்சார் கட்டட அம்சங்களை இணைத்துப்பார்ப்பதாகவே இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

### ஆய்வின் கருதுகோள்

சிந்துவெளியின் கட்டடங்கள் பற்றிய கருத்துகளும் , கட்டட எச்சங்கள் தரும் ஊகங்களும் சிந்துவெளியில் இந்துமதச் வெல்வாக்கு இருந்துள்ளமையையும் அவையே பிற்காலம் வரை இந்துமதக் கட்டடக்கலையில் செல்வாக்கு செலுத்தி வருகின்றன என்பதும் கருதுகோளாகக் கொள்ளப்படுகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை

சிந்துவெளியில் காணப்பட்ட கட்டட எச்சங்களில் , இந்துமதத்திற்குரியனவாக இருந்திருக்கலாம் என ஊகிக்கப்பட்ட கட்டடக்கலை அம்சங்கள ;; பிற்கால இந்து கட்டடக்கலையில் செல்வாக்கு செலுத்தி இருக்குமா ? எனும் விடயமே ஆய்வு பிரச்சினையாக எடுத்துக் கொள்ளபடுகின்றது.

### கண்டுபிடிப்பும் பெறுபேறுகளும்

‘தொன்மங்கள் மனிதரின் அனுபவங்களைச் சித்திரிப்பதோடு அவற்றிற்கு வியாக்கியானம் தருகிறது’ என்கிறார் பேராசிரியர்.க. பஞ்சாங்கம். . கி.மு 7000 – கி.மு 2000 வரையான ஆண்டுகாலப்பகுதியை தன்னகத்தே கொண்டது சிந்துவெளிக் காலம். இக்காலப்பகுதிக்குள் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் சிறப்புகளையும் அவர்தம் சிந்தனைகளையும் கட்புலப்படிமங்களாக்கி கட்டிடக்கலையூடாக வெளிப்படுத்தி நிற்கின்றது சிந்துவெளிக்கால கட்டிடக்கலை. இக்காலக் கட்டிடக்கலை அம்சங்களான நகரங்கள் , நீராடும் பொய்கைகள், வீடுகள், வீதியமைப்புக்கள், வெப்பக் குளியல் மேடைகள், தானியக்களஞ்சியங்கள், தூளைகள், வடிகால்கள் என்பவற்றினூடாக சிறந்த திட்டமிடல் , திசைகள் பற்றிய விளக்கம் , விண்ணியல் ஞானம் , தொழில்நுட்ப அறிவு , மருத்துவமுறைகள், மதநம்பிக்கைகளையும், சேமிப்புமுறைகள், என்பற்றை தொன்மங்களாக எதிர்கால சந்ததிகளின் வளமான

வாழ்விற்காக விட்டுச் சென்றுள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது. இவற்றை தனித்தனியாக ஆராயுமிடத்து இன்னும் ஆழமான அறிதல்கள் சாத்தியப்படலாம்.

நகர அமைப்புகள்

பண்டைக்கால மனித சமூகங்களில் நாகரீகம் தோன்றி வளர்ந்த காலத்தில் கட்டிட மாதிரிகளைத் திட்டமிட்டு அமைக்கும் அளவிற்கு பொறியியல் நுணுக்கம் தெரிந்த கூர்மாயான அறிவும் சிந்தனையும் கொண்ட மனிதர்கள் வாழ்ந்த காலம் சிந்துவெளிக்காலம். சிந்துவெளி நகரத்தின் அடிப்படைச் சிறப்பு அதன் திட்டமிடப்பட்ட நகர அமைப்பாகும். நுணுக்கமும் நேர்த்தியும் வாய்ந்த குடியிருப்புத் தொகுதிகள் பல அமைக்கப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்ட அடிப்படைத் திசை அமைப்புகள் , விண்ணியல் ஞானம் என்பன சிந்துவெளி மக்களுக்கு இருந்துள்ளமையை தொல்லியலாளர் பார்போலா கூறுகின்றார். திசையமைப்புகளை அறிந்து அவற்றின் நன்மை தீமைகளுக்கேற்ப கட்டடங்களை அமைக்கும் மரபும் அதனைப் பின்பற்றி மனையடி சாஸ்திரம் , வாஸ்த்து சாஸ்த்திரம் என்பவற்றை வகுத்துரைத்த முறைமையும் பிற்காலத்தில் இந்துக்களிடையே பிரபல்யம் பெற சிந்துவெளி மக்களின் திசையமைப்புகளும் விண்ணியல் ஞானமும் கூட வழிகாட்டி இருக்கலாம். இவைபற்றிய தனியான ஆய்வுனூடாக இவற்றை இன்னும் உறுதிபப்படுத்திக் கொள்ள முடியும்.

கோட்டையும் அதனைச் சார்ந்த கட்டிடங்கள் ஒருபுறமும் அதன் கிழக்கிலே மக்கள் குடியிருப்பும் அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வோரு வீட்டிலும் கடவுள் உருவம் வைத்து வழிபடப்பட்டது எனவும் கடவுள் உருவங்கள் வீட்டுச் சுவர்களில் இருந்த மாடங்களிலேனும் அல்லது சுவரில் மரப்பலகை அடித்து அதன் மேலேனும் வைக்கப்படடிருக்க வேண்டும் என்று தன்னுடைய நூலில்(பக் - 250 ) டாக்டர் மக்கே குறிப்பிடுவதாக 'மொஹஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரீகம் எனும் நூலில் டாக்டர் இராசமாணிக்கனார் குறிப்பிட்டுள்ளார். இன்றும் இந்துக்களின் வீடுகளில் சுவர்களில் சுவாமிபடங்களை வைப்பதற்கான மாடங்கள் கட்டப்பட்டு அல்லது மரப்பலகை அடிக்கப்பட்டு அதில் சுவாமி படங்களை வைத்து வழிபடும் வழக்கம் காணப்படுவதற்கு சிந்துவெளி வீடுகளின் வழிபாட்டறைகள் செல்வாக்கு செலுத்தியிருக்க வாய்ப்புள்ளது.

கோட்டைப்பகுதி கட்டிடங்கள் யாவும் செயற்கையாக உருவாக்கப்பட்ட மேட்டின்மேல் அமைக்கப்பட்டன. இத்தன்மை கீழே அமைந்திருக்கும் குடியிருப்புகளை அவதானிக்கவும் பரிபாலிக்கவும் இலகுவாக இருந்திருக்கும். காலப் போக்கில் பாதுகாப்பரண்களும் அரசர்களின் கோட்டைகள் உயரத்தில் அமைக்கப்படவும் இவை காரணமாயிருக்கலாம். நம் நாட்டில் கட்டப்பட்ட போர்த்துக்கேய ஒல்லாந்தர்களின் கோட்டைகள் யாவும்

உயர்த்தப்பட்ட கல் மேடைகளின் மேல் அமைக்கப்பட்மையிலும் சிந்துவெளிக் கட்டட தொன்மைகள் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம்.


கோட்டைகளின் மேல் மூலையில் கட்டப்பட்ட உயரக் கோபுரங்களும் கோட்டை மேட்டுடன் அமைக்கப்பட்ட பெரிய தானியக்களஞ்சியமும் முக்கியமானவை .இவை பிற்காலத்தில் கோட்டைகளுடன் பாதுகாப்பு கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்படவும் , சோழ பல்லவ காலங்களில் அரண்மனைகளுக்கு நிகராகத் திகழ்ந்த கோயில்கள் தானியக்களஞ்சியங்களாக பயன்படவும் அடிப்படைகளாக அமைந்திருக்கலாம்.

**நீராடும் பொய்கை**

கோட்டை மேல் கட்டப் ;பட்ட கட்டடங்களின் மத்தியில் பொய்கை அமைக்கப்பட்டுள்ளது. 180' நீளமும் 108' அகலமும் கொண்ட கட்டடத் தொகுதியின் மத்தியில் 39' நீளமும் 23' அகலமும் 8'ஆளமும் கொண்டு நீள்சதுரமாக பிரமாண்டமான நீராடும் பொதிகை கட்டப்பட்டுள்ளது. ஆழத்திற்குப் பயந்தவர்களும் நீராடிக் களைத்தவர்களும் இளைப்பாற வடக்குத் தெற்கில் படியமைப்பு காணப்படுகிறது. உயரம் கூடிக்குறைந்தவர்கள் கூட வசதியாக நீந்திக் குளிப்பதற்கான வசதிகள் கொண்டு அப்பொய்கை அமைக்கப்பட்டுள்ளது. பிரத்தியேகம் பேண அமைக்கப்பட்ட உடைமாற்றும் அறைகளும் அசுத்தநீரை வெளியேற்ற பொருத்தப்பட்ட கழிவுநீர் கால்வாய்களும் பிற்கால கட்டிட அமைப்புகளுக்கு பல கட்டிடத் தொழில்நுட்ப நுணுக்கங்களை கையளித்துள்ளன.

சிந்துவெளி மக்கள் தொடங்கி வைத்த நீராடும் பொய்கைமுறை இந்திய நாட்டிற்கும் சைவசமயத்திற்கும் கிடைத்த ஒப்பற்ற பெருஞ்சிறப்புவாய்ந்த அம்சமாகும். சைவசமயத்தவர்களின் வணக்கமுறையிலே முக்கிய இடம்பிடித்துக் கொண்ட நீர்ப்பொய்கை, காலவரையில் தீர்த்தக் குளமாகப் பரிணமித்துள்ளது. சைவக் கோயில்களின் அமைப்பிலே மூர்த்தி , தலம,; தீர்த்தம் எனும் மூன்றும் முக்கிய முக்கிய அம்சங்களாக மதிக்கப்படுகின்றன. பிற்காலத்தில் உருவான இச்சிறப்புகளுக்கு , சிந்துவெளி நீராடும் பொய்கை அமைப்பே பெருமைக்குரிய வழிகோலியாகும்.

சிந்துவெளி நீராடும் பொய்கை



சமகால கோயில் ஒன்றின் தீர்த்தக்குளம்



*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

## கோயில் கட்டடங்கள்

சிந்துவெளியிலே கோயில் கட்டடங்கள் காணப்பட்டிருக்கலாம் என்பதற்கு பல ஆராய்வாளர்களும் அறிஞர்களும் ஆதாரங்களைத் தருகின்றனர். சிந்துவெளியின் நந்திவழிபாடு பற்றி கூறும் இராசமாணிக்கம் சிந்துவெளி விலங்கு வணக்கத்தில் முதலிடம் பெறுவது எருது வழிபாடு. ஒரு கோயிலுக்குள் உள்ள சிறு கோயிலின் முன் (மூலஸ்தானத்தின் முன்) நந்தி நிற்பது ஒரு முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இதன் படி நோக்கும்போது சிந்துவெளியில் மூலஸ்தானங்களுடன் அமைக்கப்பட்ட கோயில்கள் காணப்பட்டமை உறுதியாகின்றது. இவை பிற்காலத்தில் இந்துக் கோயில்கள் மூலஸ்தானத்துடன் அமைக்கப்படுவதற்கும் மூலஸ்தானங்கள் கோயிலை விட சிறியதாக அமைக்கப்படவும் ஆதாரமாக அமைந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது.


இராசமாணிக்கனார் வெண்கலப் படிவம் பற்றிக் குறிப்பிடும் போது நாட்டிய மகளைக் குறிக்கும் வெண்கலப்படிவம் படிவம் ஒன்று கிடைக்கப்பட்டு அதன் வேலைப்பாடு கண்டு வியக்காத ஆராய்ச்சியாளர்களே இல்லை என்றும் அது கோயில் நடனமாதின் சிலையாக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது சிந்துவெளியில் கோயில்களும் அங்கு கலைவளர்க்க நடனமாதர்களும் இருந்தமையை ஊகிக்க வைக்கின்றது. தமிழகத்திலே பல்லவ சோழ காலங்களில் கோயில்களில் நடனமாதர் இருந்து கலைவளர்த்து மானியம் பெற்றமைக்கும் இக்காலக் கோயில் கட்டடஅமைப்புகளில் நடன நிகழ்த்துகைகளுக்காக நிருத்த மண்டபங்கள் அமைக்கப்படவும் சிந்துவெளியின் கோயில் பண்பாடு ஆதாரமாய் அமைந்திருக்கலாம்.

இவைதவிர மொஹெஞ்சதாரோவில் பௌத்ததூபியுள்ள இடத்தின் அடியில் இன்றளவும் தோண்டிப் பார்க்காத இடத்தில் சிந்துவெளிமக்களின் கோயில் இருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுவதாக இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். 'பல கோயில்கள் அழியும் பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டமையினால் அழிந்துவிட்டிருக்கலாம் எனவும் அன்று அக்கோயில்கள் கட்புலரீதியான படிமங்களாக காணப்படாமையால் அங்கு கோயில்கள் கோயில்கள் காணப்படவில்லை எனக்கூறுதல் இயலாது ' என டாக்டர் மக்கே குறிப்பிடுவதாக இராசமாணிக்கனார் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

உயரமான கோயில்களைக் கட்டி வாழ்ந்த சுமேரியரோடு வணிபம் போன்ற பிறபல துறைகளில் தொடர்புகளை கொண்டிருந்த சிந்துவெளி மக்கள் மக்கள் கோயில்கள் இன்றி வாழ்ந்தனர் என்பது பொருத்தமற்றது எனவும் இவர்கள் உயரக் ; கோயில்கள் கட்டி வழிபாடுகள் செய்து வாழ்ந்திருப்பர் என்பதில் ஐயமில்லை எனவும் இவர் குறிப்பிடுகின்றார். இதன்படி நோக்கின் பல்லவ சோழகாலங்கள் தொடங்கி சமகாலம்

வரை வானுயரக் கோபுரங்களோடு கோயில்கள் தோற்றம் பெற சிந்துவெளிக் கோயில்களும் கோபுரங்களும் செல்வாக்கு செலுத்தியிருக்கலாம் எனவும் எண்ண இடமுண்டு.

சிந்துவெளியிலே காணப்பட்ட பெரும்பாலான கட்டடங்கள் நாற்சதுரமான தளத்தை உடையதாக அமைக்கப்பட்டுள்ளமைக்கு அழிபாடுகளாக எஞ்சிக்கிடக்கும் கட்டடங்கள் கட்புலரீதியாக சான்று பகர்கின்றன. இவை பிற்காலத்தில் நாற்சதுரமான தள அமைப்பிலே நாகரபாணி முறைதழுவி குப்த சாளுக்கிய கோயில்கள் அமைக்கப்படவும் அவற்றிலிருந்து கொஞ்சம் வளர்ச்சி பெற்று தமிழ்நாட்டிலே திராவிடபாணி கலைவடிவக் கோயில்கள் உருவாக்கம் பெறவும் சிந்துவெளி கட்டிடங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன என எண்ண இடமளிக்கின்றன.





திராவிடபாணி கோயில்கள்

வெப்பக்குளியல் மேடைகள்

பொய்கையின் தென்மேற்கே ஒடுக்கமான இடைவெளிகளுடன் தனித்தனியாக அமைக்கப்பட்ட நீள்சதுர மேடைகள் காணப்படுகின்றன. மேடையின் கீழ்ப்பகுதி காற்றைக் கொள்ளக்கூடிய இடைவெளியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது சிந்துவெளி மக்கள் வெப்பக்குளியல் முறையினை நன்கறிந்திருந்தமையை சுட்டுகின்றது என்பதை பரராஜசிங்கம் ஆதாரப்படுத்துகிறார். காற்றிடைவெளியில் வெப்பக் காற்றை நிரப்பி மேலுள்ள மேடை வெப்பமாக்கப்பட்டதும் நோயாளர் மேடைமேலே படுக்கவைக்கப்பட்டு உடல் வெப்பமாக்கப்படுவார். வியர்வையினூடாக உடலிலுள்ள நச்சுக்களையும் கழிவுகளையும் வெளியேற்ற முடியும் எனும் வைத்திய முறைகளை சிந்துவெளி மக்கள் நன்கு அறிந்திருந்தனர். தற்கால ஆயுர்வேத மருத்துவ முறைகளுக்கும் அவை அடிப்படையாக அமைந்திருக்கலாம்.

வடிகால்கள்

சிந்துவெளி மக்களிடம் வடிகாலமைப்பு தொடர்பான சிறப்பான பொறியியல் அமைப்புக்கள் காணப்பட்டன. எல்லா வீடுகளுக்கும் குழாய்கள் மூலம் நீர்வழங்கப்பட்டது. ஒவ்வொரு வீடும், ஓடும் கழிவுநீர் அமைப்புடன் இணைக்கப்பட்டு கழிவுநீர் குளாய்கள் நிலத்தடிக்குள் பதிக்கப்பட்டு நகர எல்லைக்கு வெளியே அனைத்து கழிவு நீரும் வெளியேறும்படி செய்யப்பட்டது. கழிவுநீர் அங்கங்கே தேங்கி நின்று சேறும் சகதியுமாகி மக்களுக்கும் சுகாதாரத்திற்கும் தீங்கு விளைவிக்காதவாறு நகர சுகாதாரம் பேணப்பட்டது. பின்னாளில் இவ்வடிகாலமைப்புகள் கட்டடதொழில்நுட்பத்தில் பலவாறு பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய கட்டட அமைப்புக்கள்

வடிகால்கள் மூலம் சேகரிக்கப்பட்ட கழிவுநீர் நகருக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த கால்வாயில் போய்விழுமாறு அமைக்கப்பட்டிருந்தது. நீருடன் வந்துவிழும் பொருட்களை வடிகட்டுவதற்காக படிவுத்தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. வெளியூர்களிலிருந்து வருபவர்கள் தங்கிச்செல்ல சத்திரங்களும் ஆதுலர்சாலைகளும் அமைக்கப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன. சுமைகளுடன் வரும் வண்டிகள் இலகுவாகச்செல்ல கெட்டியான பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. வீட்டின் உட்சுவர்களில் பிறைமாடங்கள் அமைக்கப்பட்டிருந்தமை பற்றி சேர்.மோர்டிமர் வீலர் கூறியுள்ளார். இக்கட்டிட அமைப்பு கடவுள் உருவங்கள் வைத்து வழிபட அமைக்கப்பட்டிருக்கலாம் என்று பரராஜசிங்கம் குறிப்பிடுகிறார். தற்காலத்தில் இந்துக்களின் வீடுகளில் சுவாமியறைகளில் மாடங்கள் அமைத்து சுவாமிபடங்கள் வைத்து வழிபட இக்கட்டட அமைப்புகள் வழிகோலியிருக்கலாம்

நிறைவுரை

கி.மு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளியில் கட்டடங்கள் காணப்பட்டமைக்கு அகழ்வாய்வுகள் சான்று பகர்கின்றன. இச்சான்றுக ;டாக திட்டமிட்ட நகரமைப்பு, வைரமான சுட்ட செங்கல்லிலாலான உறுதியான வீடுகள் , சமகால நாகரிகநாடுகளில் கூட காணமுடியாத நீராடும் பொய்கை, நகர சுகாதாரத்தைப் பேணத்தக்க சிறந்த வடிகாலமைப்பு முறைகள், மருத்துவக் கண்டுபிடிப்பான வெப்பக்குளியல் மேடைகள் , தானியக்களஞ்சியங்கள் போன்றவை வெளிப்படுத்தி நிற்கும் தொன்மங்கள் தற்கால கட்டடக்கலை மரபுகளில் பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அவை சிந்துவெளியிலிருந்து பெறப்பட்டதான தகவல்கள் எவையும் வெளிப்படுத்தப்படாமல் இருப்பது வியப்பிற்குரியதாகவே உள்ளது. நீராடும்பொய்கை , தானியக்களஞ்சியங்கள், மாடங்கள்

தாங்கிய வீடுகள் , கிழக்கு நோக்கி அமைக்கப்பட்ட வீட்டு முகப்புகள் என்பன சிந்துவெளியில் காணப்பட்ட இந்துப்பண்பாட்டின் தொன்மைகளின் வெளிப்பாடுகளாயும் அமைந்திருக்கலாம் என்பதும் , கோயில்களின் மூலஸ்தான அமைப்பு , நிருத்த மண்டபங்களின் தோற்றம் , உயரமான கோயில் அமைப்புகள் , நாகர திராவிடபாணிகளின் அமைப்பு என்பவற்றிற்கு சிந்துவெளிக் கட்டடங்கள் வழிகோலியிருக்கலாம் என்பது இவ்வாய்வினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

## துணை நூற்கள்


[1] பரராஜசிங்கம் . க. சிந்துவெளி நாகரிகமும் தமிழரும். 2017. மட்டக்களப்பு தமிழ்ச்சங்கம்

[2] சுந்தரம்பிள்ளை. சே. இந்துநாகரிகத்தில் கலை. 1994. பாரதி பதிப்பகம். யாழ்ப்பாணம்.

[3] சுவாமிநாதன். ஆ. சிந்துவெளிக் குறியீடுகள். 1994. சென்னை அராய்ச்சியாளர் மையம்.

[4] ஞானி. தமிழகத்தில் பண்பாட்டு நெருக்கடிகள். 1994. நிகழ் வெளியீடு

[5] இராசமாணிக்கனார். மா. மொகஹஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம். (1997) கழகவெளியீடு

[6] இந்துநாகரீகம் - தரம் 12. மாணவர்களுக்கான வளநூல். தேசியகல்வி நிறுவகம். மகரகம.